[1980 பிப்ரவரி 13

புழலேரியிலிருந்து வெளிவரும் உபரி நீர்.

*வினா எண் 137—திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையை அடுத்துள்ள புழலேரியிலிருந்து மழைக் காலங்களில் வெளிவரும் உபரி நீரை எண்ணூரை அடுத்துள்ள கடலில் வடியவிடும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இல்லை. புழலேரியிலிருந்து மழைக் காலங்களில் வெளிவரும் உபரி நீர், தானாக வடிகால் வழியே ஓடி பக்கிங்ஹாம் கால்வாய் மூலம் கடலில் கலந்து விடுகிறது.

திரு. பொ. சிகாமணி : இந்த புழலேரியில் உள்ள அதிகப் படியான உபரி நீர் அங்குள்ள விவசாயத்தைப் பாதிக்கக்கூடிய அளவில் பெரிய அளவில் நஷ்டத்தை எற்படுத்துகிறது. இதற்கான மனு சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. தமிழ்நாடு முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் கூட இரண்டு முறை பார்வையிட்டு அதற்கான நிவாரணங்கள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு உறுதி அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவசாய நிலங்கள் பாதிக்காத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல மழைக்காலங்களில் வருகிற உபரி நீரைத் தேக்கி வைக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நாம் பல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறோம். அதே போல் மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் கூட அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள் ஆகவே அந்த அளவில் இத் திட்டங்கள் வகுக்கப் பட இருக்கின்றன.

திரு. பொ. சிகாமணி : இந்த உபரி நீரால் அந்தப் பகுதியில் உள்ள வயல்கள் பாதிக்கப்படுகின்றன. அதற்கான நிவாரணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : உறுப்பினர் அவர்களின் யோசனை சிரமேற்கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : புழலேரி நீர்தான் சென்னை நகர மக்கள் குடிநீராகப் பயன்படுத்துவது என்பது அரசுக்குத் தெரியும். இந்த புழலேரி கரைப் பகுதிகளில் சோழவரம் போன்ற ஏரி கரையோரப் பகுதிகளில்தான் அந்தப் பகுதியில் உள்ள

மக்கள் சிலர் காலைக் கடன்கள் கழித்து வருகிறார்கள் ஆகவே, சென்னை நகருக்கு வரும் குடிநீர் சுகாதாரக் கேடு பயக்கும் நிலை ஏற்படுகிறது அதை நான் நேரடியாக பார்த்தேன். ஆகவே அதைப் பாதுகாக்கிற வகையில் அதைச் சுற்றிலும் வேலி போட்டால் காலைக் கடன்களை கரையோரங்களில் கழிக்கக்கூடிய நிலைமை ஏற்படாது தவிர்க்கலாம். ஆகவே அதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : குடிநீருக்காக இருக்கக்கூடிய இடங்களை அசுத்தம் செய்யக் கூடாது என்பது விதி. மாண்புமிகு உறுப்பினர் மாநகராட்சி உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். இப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்ணுறுகிற நேரத்தில் அவர்களே கூட உடனே நடவடிக்கை எடுத்து யார் யார் செய்கிறார்களோ அவர்களைச் சந்தித்து அப்படிச் செய்யக் கூடாது என்று அறிவுரைகள் கூறியிருக்க முடியும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினரது யோசனையை ஏற்றுக் கொண்டு அதை அரசு நடைமுறைப்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாநகராட்சி உறுப்பினராக இருந்தேன். சுகாதாரக் குழு தலைவராகவும் இருந்தேன். இந்தப் பணிகளை அரசுதான் செய்ய வேண்டும். அதற்கான நிதி வசதி மாநகராட்சிக்குக் கிடையாது. ஆகவே, இப்போது நகராட்சி உறுப்பினராக இல்லாததால், இப்போது நடப்பதை நேரடியாகப் பார்க்கிற காரணத்தால் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே நீங்கள் சார்ந்திருக்கக்கூடிய கட்சி மாநகராட்சியில் ஆளும் கட்சியாக இருந்திருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம். அப்போது கூட நடவடிக்கை எடுத்திருக்க முடியும். இருந்த போதிலும் உங்கள் கருத்தை இந்த அரசு நடைமுறைப்படுத்தும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : ஒரு ரிவர் பேஸனிலருந்து அங்குள்ள உபரி நீரை இன்னொரு ரிவர் பேஸினுக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? மேற்கு நோக்கி ஓடுகிற ஆற்றின் நீரை கிழக்கு நோக்கி திருப்பிவிடும் செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு ரிவர் பேசினிலிருந்து இன்னொரு ரிவர் பேசினுக்கு உபரி நீரை மாற்றுகிற செயற்குறிப்பு தற்போது அரசின் ஆய்வில் இல்லை நதிகளை எல்லாம் தேசியமயமாக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த

அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல் மேற்கு நோக்கி பாயும் நதிகளை கிழக்கு நோக்கி ஓடும்படி மாற்றினால் பல்வேறு பகுதிகளை தமிழ்நாட்டில் பாசன வசதிக்கு கொண்டுவர முடியும் என்ற எண்ணத்தோடு தமிழக முதல்வர் கூட நடவடிக்கை எடுத்து அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு இன்றைக்கு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தினால் தமிழ்நாட்டில் பாசன வசதியற்றிருக்கக் கூடிய பலவேறு பகுதிகள் எல்லாம் பாசனவசதி பெறுகிற நிலை ஏற்படும்.

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் சாலைப் பணிகள்

*வினா எண். 138—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஏற்றிச்செல்ல வசதியாக சர்க்கரை ஆலையினரால் பரிந்துரைத்த ரோடுகளின் விபரம் என்ன ?

(ஆ) இதில் எத்தனை ரோடுகளில் பணி முடிந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) சட்டப்பேரவையின் முன் ஓர் அறிக்கை ** வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-50]

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற விவர அறிக்கையில், ஆறாவதாக குறிக்கப்பட்டிருக்கின்ற தரைப்பாலத்தை சர்க்கரை ஆலைகள் இயக்குநர் பரிந்துரை செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி ஏறத்தாழ 10 ஊராட்சி ஒன்றியங்களை இணைக்கின்ற காரணத்தால், இந்தத் தரைப்பாலம் அமைக்கப்பட்டால் பல்லாயிரக்கணக்கான டன்கள் கரும்பு புதியதாக இந்த ஆலையில் பதிவு செய்யப்பட இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இந்த தரைப் பாலத்தைப் போடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இந்த அம்பலூர்-ஏக்லாஸ்புரம் தரைப் பாலம் கட்டுவதற்கான திட்டம் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. உடனடியாக அது செயல்படுத்தப்படும்.

** 610-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.